# "அம்பாந்தோட்டை மாவட்ட முஸ்லிம்களின் குடியேற்றமும் வரலாற்றுப் பாரம்பரியமும்"

LIBRARY
09 OCT 2020
EUSL, SRI LANKA

பெயர் : செல்வி. இஹ்ஸானியா இஸ்மாயில்

பதிவு இலக்கம் : EU/IS/2013/AC/25

சுட்டிலக்கம் : CS 5175

FAC 818
Project Report
Library - EUSL

இவ்வாய்வுக் கட்டுரையானது இளங்கலைமாணிச் சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை,

கலை கலாசாரபீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2019.

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# முன்னுரை

இலங்கையுடன் அரபு வணிகத்தினூடான துறைமுகங்களை மையமாக வைத்து தோன்றிய அரபு குடியேற்றங்களே ஆரம்ப கால முஸ்லிம் குடியேற்றங்களாக விளங்கின. தொடர்ந்து ஒல்லாந்தர் காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை பொறுத்தளவில் நடைபெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வு மலாய் இனத்தவர்களின் தோற்றமாகும். ஒல்லாந்தர் ஆதிக்கம் கிழக்கிந்திய தீவு வரை பரவியிருந்த காலப்பகுதியில், ஆட்சிக்கு எதிராக புரட்சி செய்து ஆட்சிக்கு கடும் அச்சுறுத்தலாக விளங்கிய இளவரசர்கள், பிரதானிகள், மார்க்க அறிஞர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது ஒல்லாந்தரின் கொள்கையாக இருந்தது. இலங்கைத் தீவுக்கும் இவ்வாறே மலாயர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் தமது குடும்பங்களுடன் கொழும்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வாழ்ந்தனர். இந்நாட்டில் ஏற்கனவே நீண்டகாலமாக குடியேறியிருந்த அரபு வணிகர்களின் வழித்தோன்றல்களான இலங்கை முஸ்லிம்களுடன் நெருங்கி இரண்டறக் கலந்து பழகும் வாய்ப்பை மலாயர்கள் பெற்றுள்ளனர். அவ்வகையில் இலங்கையில் அம்பாந்தோட்டை பிரதேசத்திலும் முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றதுடன், இம்மாவட்ட முஸ்லிம்களின் வரலாறானது பெரும்பாலும் மலாய் இனத்தவர்களின் குடியேற்ற வரலாற்றுடன் தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நான்கு கிராமங்களில் முஸ்லிம்கள் பிரதானமாக வாழ்கின்றனர். ஏனையவற்றில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். தற்போது மாவட்டம் முழுவதிலும் முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் அம்பாந்தோட்டை முஸ்லிம்களின் குடியேற்றம் தொடர்பாக ஆராயப்பட வேண்டியுள்ளது.

இவ்வாய்வானது இலங்கை முஸ்லிம்களின் வருகை, அம்பாந்தோட்டையில் முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்கள், பொருளாதார முறைகள், வாழ்வியல் பண்பாட்டுக்கூறுகள், வழக்கிழந்து போன பாரம்பரியங்கள், என்பவற்றினூடாக "அம்பாந்தோட்டை முஸ்லிம்களின் குடியேற்றமும் வரலாற்றுப் பாரம்பரியமும்" எனும் தலைப்பின் கீழ் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் அம்பாந்தோட்டை முஸ்லிம்கள் தொடர்பான தகவல்களை தற்போது பிரதேசத்தில் வசிக்கும் முதியோர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், கற்றறிந்தவர்கள் ஆகியோரிடம் சென்று அவர்களுடன் கலந்துரையாடி நேர்காணல் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்கள், வாய்மொழித் தரவுகள், நேரடியான கள ஆய்வுகள், ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள், நிர்வாகக் குறிப்புகள், அரசாங்க இணையத்தள

புள்ளிவிபரங்கள் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளினடிப்படையில் இவ்வாய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இவ்வாய்வானது ஆறு அத்தியாயங்களை கொண்டுள்ளது. முதலாம் அத்தியாயமானது ஆய்வுப் பிரதேச அறிமுகத்தையும் ஆய்வின் அறிமுகத்தையும் கொண்டுள்ளது. இரண்டாம் அத்தியாயத்தில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது. இதில் முஸ்லிம்களின் ஆரம்பகால குடியேற்றங்களும் அதன் பரம்பல், மலாய் இனத்தவர்கள் இலங்கை நோக்கிய வருகை பற்றி ஆராயப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை முஸ்லிம்களின் குடியேற்ற வரலாறு தொடர்பாகவும் முஸ்லிம்களது சமய கல்வி நிறுவனங்கள் பற்றிய விடயங்களும் மூன்றாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. நான்காவது அத்தியாயமானது அம்பாந்தோட்டை முஸ்லிம்களின் பொருளாதார நிலை தொடர்பாக ஆராய்ந்துள்ளது. ஐந்தாவது அத்தியாயம் இப்பிரதேச முஸ்லிம்களின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களை அடையாளப்படுத்தி காட்டியுள்ளது. இறுதி அத்தியாயம் இவ்வாய்வின் தொகுப்பாக அமைந்துள்ளது.

இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையுடன் சேர்ந்த ஆய்வாக காணப்படுவதனால் ஆய்வுப்பிரதேச முஸ்லிம்கள் பற்றிய பிற்கால ஆய்விற்கான நெறிப்படுத்தலை ஏற்படுத்தக்கூடும்.

ஆய்வாளன்

# பொருளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | i |
| நன்றியுரை | | iii |
| விளக்கக் குறிப்புகள் | | iv |
| அத்தியாயம் : 01 | ஆய்வு அறிமுகம் | 1 - 9 |
| அத்தியாயம் : 02 | இலங்கையில் முஸ்லிம்களின் குடியேற்றங்கள் | 10 - 25 |
| அத்தியாயம் : 03 | அம்பாந்தோட்டை முஸ்லிம்களின் குடியேற்ற வரலாறு | 26 - 53 |
| அத்தியாயம் : 04 | அம்பாந்தோட்டை முஸ்லிம்களின் பொருளாதார நிலை | 54 - 63 |
| அத்தியாயம் : 05 | வாழ்வியலும் பண்பாடும் | 64 - 86 |
| அத்தியாயம் : 06 | முடிவுரை | 87 - 93 |
| உசாத்துணை | | |
| பின்னிணைப்பு | | |